மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2022 ஆம் ஆண்டு மாதம் மாதம் 25 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.04/2021
அ.வ.எண்.111/2021

எம்.கோவிந்தன் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. காவேரி
2. மாரியப்பன்
3. பழனிவேல்
4. சுந்தரம்
5. வேலுமுருகன்
6. மதியன்
7. முருகன்
8. சக்திவேல்
9 தங்கதுரை
10. மாவட்ட ஆட்சியர், சேலம்.
11. வட்டாட்சியர், மேட்டூர். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 24.03.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 9 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.மோகன்ராம் அவர்கள் ஆஜராகியும், 10, 11 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.எஸ்.ஹரிநாராயணன் அவர்கள் ஆஜராகியும், 10, 11 ம்எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க உத்தரவிட கோரி மனுதாரர்/வாதி மனுதாக்கல் செய்துள்ளார்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

மனுதாரர் வழக்கு சொத்தினை 25.08.1983 ல் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார். 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் அருகில் உள்ள நிலத்துக்காரர்கள். 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் 23.07.2021 ல் வழக்கு சொத்தில் அத்துமீறி ரோடு போட முயற்சி செய்தனர். அதனை மனுதாரர் அருகில் உள்ளவர்கள் துணையுடனும், குடும்ப நண்பர்கள் மூலமும் தடுத்துவிட்டார். ஆகவே மனுதாரர் 11ம் எதிர்மனுதாரரை அணுகியபோது தான் வழக்கு சொத்து அரசாங்க நிலம் என தவறாக வகைப்பாடு செய்தது தெரிய வந்தது. எனவே வழக்கு சொத்தின் சூழ்நிலையை நிரூபிக்க கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நிலஅளவையர் உதவியுடன் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க கோரி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார்.

<u>2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 9 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனு சட்டப்படிக்கும், சங்கதிகளின்படிக்கும் தவறானது. மனுதாரர் 25.08.1983 ல் கிரையம் பெற்று அனுபவித்து வருவதாக கூறுவது பொய்யாகும். வழக்கு சொத்தானது அரசு புறம்போக்கு தரிசு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே யாரும் வழக்கு சொத்தை விற்பனை செய்ய முடியாது. மேலும் மனுதாரர் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் போர்ஜரியானதாகும். கடந்த 23.07.2021 ல் வழக்கு சொத்தில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் ரோடு போட முயற்சி செய்ததாக கூறுவது பொய்யாகும். மனுதாரரும் அவரது குடும்பத்தாரும் வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். மேலும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் அந்த தரிசு வழியாக மேட்டுர் முதல் எடப்பாடி வரை செல்லும் ரோட்டில் செல்வதை மனுதாரர் தடுத்து வருகின்றார். ஆகவே எதிர்மனுதாரர்கள் வட்டாட்சியரிடம் கடந்த 12.07.2021 ல் முறையீடு செய்ததன் பேரில் அங்கு உள்ளவர்களை விசாரித்து வழக்கு சொத்தின் தென் பகுதியில் ஏற்கனவே இருந்த 15 அடி மண்பாதையில் ரோடு போட நடவடிக்கை எடுத்தார். அந்த பாதையை தவிர எதிர்மனுதாரர்களுக்கு வேறு பாதை இல்லை. எதிர்மனுதாரர்களின் சொத்தை அபகரிக்க மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு இடையூறு செய்து வருகிறார். மனுதாரருக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்பதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் கோரியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனு விசாரணையின் போது மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் மனுதாரர் வழக்கு சொத்தினை 25.08.1983 ல் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் எனவும், 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் அருகில் உள்ள நிலத்துக்காரர்கள் எனவும், 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் 23.07.2021 ல் வழக்கு சொத்தில் அத்துமீறி ரோடு போட முயற்சி செய்தனர் எனவும், அதனை மனுதாரர் அருகில் உள்ளவர்கள் துணையுடனும், குடும்ப நண்பர்கள் மூலமும் தடுத்துவிட்டார் எனவும், ஆகவே மனுதாரர் 11 ம் எதிர்மனுதாரரை அணுகியபோது தான் வழக்கு சொத்து அரசாங்க நிலம் என தவறாக வகைப்பாடு செய்தது தெரிய வந்தது எனவும், எனவே வழக்கு சொத்தின் சூழ்நிலையை நிரூபிக்க அதன் இயற்பியல் தோற்றத்தை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நிலஅளவையர் உதவியுடன் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க கோரி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1 முதல் 9 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் 25.08.1983 ல் கிரையம் பெற்று அனுபவித்து வருவதாக கூறுவது பொய் எனவும், வழக்கு சொத்தானது அரசு புறம்போக்கு தரிசு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும், ஆகவே யாரும் வழக்கு சொத்தை விற்பனை செய்ய முடியாது எனவும், மேலும் மனுதாரர் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் போர்ஜரியானது எனவும், கடந்த 23.07.2021 ல் வழக்கு சொத்தில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் ரோடு போட முயற்சி செய்ததாக கூறுவது பொய் எனவும், மனுதாரரும் அவரது குடும்பத்தாரும் வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் எனவும், மேலும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் அந்த தரிசு வழியாக மேட்டூர் முதல் எடப்பாடி வரை செல்லும் ரோட்டில் செல்வதை மனுதாரர் தடுத்து வருகின்றார் எனவும், ஆகவே எதிர்மனுதாரர்கள் வட்டாட்சியரிடம் கடந்த 12.07.2021 ல் முறையீடு செய்ததன்

பேரில் அங்கு உள்ளவர்களை விசாரித்து வழக்கு சொத்தின் தென் பகுதியில் ஏற்கனவே இருந்த 15 அடி மண்பாதையில் ரோடு போட நடவடிக்கை எடுத்தார் எனவும், அந்த பாதையை தவிர எதிர்மனுதாரர்களுக்கு வேறு பாதை இல்லை எனவும், எதிர்மனுதாரர்களின் சொத்தை அபகரிக்க மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு இடையூறு செய்து வருகிறார் எனவும், மனுதாரருக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்பதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) மனுதாரர் கூறுவதுபோல் வழக்கு சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டதா அல்லது 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் கூறுவதுபோல் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டதா என்பது குறித்து அசல் வழக்கு விசாரணைக்குப் பின்னிட்டு தான் முடிவு செய்ய முடியும். இந்நிலையில் மனுசொத்தில் பாதை இல்லை என மனுதாரர் கூறியுள்ள நிலையில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் பாதை உள்ளது என கூறுவதால் யார் கூறுவது உண்மை என்பது குறித்து நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்யும் அறிக்கையானது இவ்வழக்கை தீர்மானிக்க உதவும் என்பதால் இம்மனு அனுமதிக்கதக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக திரு.கே.மாதையன் வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்படுகிறார். கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் வழக்கு சொத்துகளை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையருடன் பார்வையிட்டு இயற்பியல் தோற்றம் குறித்தும், பாதை உள்ளதா, இல்லையா என்பது குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணம் ரூ.5000/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணத்தை மனுதாரர் நேரடியாக நீதிமன்ற ஆணையாளருக்கு செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு வழங்கியதற்கு பின்னிட்டு வழக்கு சொத்தினை பார்வையிட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அழைக்க.16.06.2022.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

S PRINCE SAMUVEL RAJ
Digitally signed by S PRINCE SAMUVEL RAJ
Date: 2022.03.25 17:10:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

S PRINCE SAMUVEL RAJ
Digitally signed by S PRINCE SAMUVEL RAJ
Date: 2022.03.25 17:10:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.